**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 89/2021**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சிவக்குமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 01.07.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) ஆறுமுகத்தின் வாரிசுகள் பேரான், ஓந்தான், வழியான், முதலச்சிஅம்மாள் ஆகியோர் ஆவார்கள். மேற்படி 4 பேரும் எந்தெந்த சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர் என குறிப்பாக சொல்ல முடியுமா என்றால், குறிப்பாக சொல்ல முடியாது. அவரவர் சொத்துக்களை அவரவர் அனுபவம் செய்து வருகின்றனர். எனது பதிலுரையில் A, B, C என பிரித்து அட்டவணை சொத்துக்கள் காட்டியுள்ள நிலையில், அந்த சொத்துக்களை குறித்து பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. பதிலுரையில் சொல்லியுள்ள A, B சொத்துக்களுக்கும், தாவா சொத்துக்களுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். எனது பதிலுரையில் சி அயிட்ட சொத்தில் 3 ம் அயிட்டமாக காட்டியுள்ள சர்வே எண் 248/2D தான் வழக்கு சொத்து என்றால் சரிதான்.

2) சர்வே எண் 248/2 தான் உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண் 248/2A, 248/2B, 248/2C, 248/2D என பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். ஓந்தான் 1945 ல் வழியான் என்பவரிடம் இருந்து சர்வே எண் 248/2 ல் சுமார் 4 ஏக்கர் 36 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டுதான் சர்வே எண் 248/2 உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பட்டா எண் 105 ஐ தவிர பதிவு செய்து ஆவணங்கள் ஏதாவது தாவா சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், 1946 ல் முதலச்சி அம்மாள், ஓந்தான் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் (பி.சா.ஆ.2), அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.2 ல் சர்வே எண் 248/2 கிரையம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

3) அ.வ.எண்.203/2018 ல் வாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஏற்பட்ட உத்தரவு வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

அ.வ.எண்.203/2018 ல் உள்ள வழக்கு சொத்தும், இந்த வழக்கு சொத்தும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. அ.வ.எண்.203/2018 ல் உள்ள வழக்கு சொத்து சர்வே எண் 248/2A என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் 248/2D என்றால் சரிதான். அ.வ.எண்.203/2018 தீர்ப்புக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அனைத்து சொத்தும் சர்வே எண் 248/2 ற்கு கட்டுப்பட்டது. 1945 ம் வருடம் முதல் ஓந்தான் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வந்து, அதற்கு பின்னிட்டு அவர் மகனான வாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததாகவும், மேற்படி சொத்தில் எங்கள் பெயரில் ஏற்பட்ட தவறான பட்டாவை வைத்து எங்கள் பெயரில் மின் இணைப்பு பெற முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல.

4) எங்கள் பெயரில் ஏற்பட்ட தவறான பட்டாவை ரத்து செய்ய வாதி வருவாய்துறையில் மனு கொடுத்து விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் விசாரணைக்கு வரவில்லை. வருவாய்துறையில் இருதரப்பினரையும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கூறினார்கள் என்றும், வாதி தன் தரப்பு ஆவணத்துடன் ஆஜர் ஆனார், ஆனால் நான் வராத காரணத்தால் தற்போது வரை விசாணை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. மின் வாரியத்தில் வாதி கொடுத்த ஆட்சேபனையால் தற்போதுவரை எங்கள் பெயருக்கு மின் இணைப்பு வழுங்கவில்லை என்றால் சரிதான். பட்டாவைத் தவிர எங்கள் பெயரில் வேறு உரிமை ஆவணங்கள் இல்லாததால் எங்களுக்கு மின் இணைப்பு வழங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் எப்போதும் அனுபவம் செய்தது கிடையாது என்றும், பட்டாவை வைத்து எங்கள் பெயரில் மின் இணைப்பு பெற முயற்சிக்கிறோம் என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**